Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மாசி (07 - 02 - 1991) வியாழக்கிழமை ஓசை: 354

## மயிருக்குப் பதிலாய் சிரசில் இறக்கை முளைத்தது

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் டெரிலோ டோறி என்பவருக்கு தட்டையான தலை சிரசில் கேசம் வளர்வதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். இந்தப் பரிசோதனைகளின்பின் அவரின் தட்டையான சிரசில் கேசத்திற்குப் பதிலாக இறக்கைகள் வளரத் தொடங்கின. இது மட்டுமல்லாமல் இவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மண்மீட்புப் போரில்

# தச்சன்காட்டுச் சந்தியில்

# 26 புலிகள் வீரமரணம்

(மாவிட்டபுரம்)

மண் மீட்பிற்காகத் தச்சன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ மினிமுகாமைத் தகர்க்க முற்பட்ட இருபத்தாறு விடுதலைப் புலிகள் வீர மரணமடைந்ததாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

நேற்று முன் தினம் இரவு 9-30 மணியளவில் இத்தாக்குதல் முயற்சி இடம்பெற்றது. இம் முயற்சியின்போது சிறிலங்கா இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் சுமார் இரு மணித்தியாலங்கள் மோதல்கள் இடம்பெற்றன. இத்தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு துணையாக விமானப் படையினரும் புலிகளின் நிலைகள்மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இம்மோதலின்போது சிறிலங்கா இராணுவத்தினர் பலமான ஷெல் தாக்குதலை குடிமனைகளை நோக்கி மேற்கொண்டனர்

## சிறிலங்கா அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, இராஜாங்க அமைச்சர்கள், மற்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

வீர மரணம் அடைந்தோர் நினைவாக

## தட்டுகல்லில கண்ணிவெடி; 9 படை பலி; 26 பேர் காயம்

(திருக்கோணமலை)

1990ஆம் ஆண்டு தேசத் துரோகிகளை வெற்றி கொண்டு வீரத்தில் வீர மரணமடைந்த 22 போராளிகளின் நினைவாக திருமலை மாவட்டம் தட்டுக்கல் என்னும் இடத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டு சிறிலங்கா இராணுவ வாகனம் முற்றாக அழிக்கப்பட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கிய 2படையினர்பலி;2பேர்காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சேதமடைந்ததாக அறியப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் சில வக்துறை இராணுவ முகாமிலிருந்து ரஜூனதிதை இராணுவ முகாமை நோக்கி மூன்று இராணுவ வாகனங்களில் சென்று கொண்டிருந்த இராணுவத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## தெனமராட்சியிலும், அரியாலையிலும்

## போராளிகளின்புகழுடல்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தச்சன்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த வலிகாமப் பகுதி போராளிகளின் புகழுடல்கள் அரியாலையிலும், தென்மராட்சி மற்றும் தென் தமிழீழப் பகுதிப் போராளிகளின் புகழுடல்கள் தென்மராட்சியிலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

கொல்லங்கலட்டியில்

## விமானக் குண்டுவீச்சிற்கு 1 பெண்பலி; 10 பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

கொல்லங்கலட்டியில் நேற்று சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பத்துப் பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட பெண்மணியின் பெயர் கிடைக்கவில்லை.

ரா. ஜயபதி (9 வயது), உருத்திரா. டீஸ்வரன் (40 வயது), ஜெகதி ஜெனனி (4 வயது), கொல்லப்பட்ட பெண்ணின் மகளான தர்சினி 11/2வயது) ஜெகதீஸ்வரன் (37 வயது). (4 ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் கடும் மோதல்; ராணுவம் முகாம் திரும்பியது

(திருக்கோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூர் சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினருக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்த முகாமில் இருந்த இராணுவத்தினர் வெளியேறிய சமயம் விடுதலைப்புலிகள் அவர்களை நோக்கி தாக்குதலைத் தொடுத்தபோது இராணுவத்தினர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராணுவ துறையினர் ஈராக்கினால் ஏமாற்றப்பட்டனர்

-ஹெவாட் ரெச்சர்

நிலத்துக்கு அடியில் ஆழமான பங்கர்களையும் மற்றும் பாதுகாப்பான மறைவிடங்களையும் ஈராக் அமைத்துக் கொண்டுள்ளது. இதனால் அமெரிக்க இராணுவப் புலனாய்வுத்துறை ஈராக்கின் யுத்தமுனை இரகசியங்களை அறிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளதாம், இத்தகவலை வளைகுடாவிலுள்ள (4 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க போர்விமானங்களுக்கு

## மனிதாபிமான அடிப்படையில் கொழும்பில் பெற்றோல்

(கொழும்பு)

அமெரிக்காவினதும் அதன் கூட்டுப்படை விமானங்களை மற்றும் கப்பல்களுக்கு கொழும்பில் எண்ணெய் நிரப்பிச் செல்வதற்கான அனுமதியினை சிறிலங்கா அரசாங்கம் வழங்கியுள்ளதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹெரால்ட் ஹேரத் தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் உத்தியோகபூர்வமாக இதனை அறி (4 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த மாதம் 1,22,682 பேர் வடபகுதியிலிருந்துவெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இருந்து கடந்த மாதத்தில் 1,22,682பேர் வெளியேறிச் சென்றுள்ளனர். இவர்களில் 64 609 பேர் நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் என்றும் புள்ளிவிபரணி பீடத்தில் இருந்து அறிய முடிகின்றது.

## வீரவணக்கம் 26 புலிகளுக்கு !

(யாழ்ப்பாணம்)

மண்மீட்புப்போரில் நேற்று முன்தினம் இரவு தச்சன்காட்டு சந்தியில சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் 26 போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர். இவர்களின் பெயர் விபரம் வருமாறு:

மேஜர் சிறி (கதிர்காமத்தம்பி ராஜசிறி கல்வயல, சாவகச்சேரி),

மேஜர் சலீ (அல்போன்ஸ் பிறின்ஸ்ரன் 1 ஆம் குறுக்குத் தெரு பாஷையூர்) கப்டன் ரெதீஸ் (பாசுபதிர சா றொபேட் நிக்ஷன் 443 பாரதி ராட் திருமலை) கடன் தீபன் (சிவலிங்கம் ஜெபசீலன் அலஸ் தோட்டம் சாம்பல் தீவு) கப்டன் ஜெப், கப்டன் அஜிந்தன், (செ முராசா ஜெகதீசன், தவலை இயற்றாலை, வரணி) லெப். மணிமாறன் (இனைத்தம்பி பாவேந்திரராசா, பதுளைறோட், சரடியனாறு), லெப். மனாட (அரவிந்தராசா நிர்மலன், யாழ்ப்பாணம்), லெப் ஜேம்ஸ் கந்ததைபா ஜய குமார, அரலி), லெப். அசோக (முருகன் ராசகுமார்). 2ஆம் லெப் நகுலஸ் (குமாரசிங்கம் சத்தியசீலன், செக்கடிப்புலவு, வவுனியா), 2ஆம் லெப் ஆல்விஸ் மாசிலமணி சிறிதரன், மீசாலை), எட்வேட் (மயில்வாகனம் தயபரன் மூதலைக்குடா, கொக்கட்டிச்சோலை), சிவசோதி (கணபதிப்பிள்ளை ரவீந்திரன் 1 ஆம் குறிச்சி வீதி, தம்பிலுவில்), தயாநிதி (கணபதிப்பிள்ளைசந்திரசாமி, வந்தனேரி, மருதங்கேணி மட்டக்களப்பு)

கோபு (கணபதி பிள்ளை சதாசிவர், மூதலைக்குடா, மட்டக்களப்பு. நந்தன் (மார்க்கண்டு அழகவேல், இலுப்பையடிச்சேனை, வேப்பவெட்டுவான். மட்டக்களப்பு) திலக் (கிருஷ்ணசபாபதி மிகேந்திரராசா, புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, பபு (கணபதிப் பிள்ளை காந்தராஜா, கோரன்பற்று பனை), அருள் (பொன்னையா விஜயசேகரன் கைதடி), நந்தன் (நல்லதம்பி பாலகிருஸ்ணன், இயக்கச்சி) சுதன், சுக்ளா (பலசுப்பிரமணியம் மூலன், திருநெல்வேலி), தமிழ்மணி இரத்தினம் நிரஞ்சன் கோண்டாவில்) கண்ணன், தேவ்ஸன் ஆகியோரே இவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்

## பாதிரியாரும் ஜோசப் முகாமில்

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர் வவுனியா 'ஜோசெப்' இராணுவமுகாமில தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி இந்தச் சம்பவம் நடைபெற்றது. மானிப்பாயைச் சேர்ந்த

## வரிவிளம்பரம்

### கிளீன்கட் போட்டோஸ்ரற்

போட்டோஸ்ராற் பிரதிகளையும், றோனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாக செய்து பெற்றுக்கொள்ள கிளீன்கட் 239 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (B-1958

### வரலாறு

விற்பனையாகின்றது! வரலாறு- ஆண்டு : 11, வரலாறு- ஆண்டு : 6 ( புதியபாடத்திட்டம் ) ஆசிரியோன் : நதர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் (R-1083)

### தேவை

நாட்டுத் தேக்கு (மல்தேக்கு) விதைகள் தேவை. மின்கலைத் யாழ்ப்பாணம். (B/1982)

### சலவைப் பவுடர்

தமிழ் சலவைக்குச் சிறந்த சாதனை மிக்கவர் சலவைப் பவுடர் 100 வெர்று பக்கெற் சோப்பிகது ஒரு கைலேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள். மின்கலைத் யாழ்ப்பாணம். (B/1981)

### தரண ஸ்ருடியோ

றபர்சில், கலர் - கறுப்பு வெள்ளை - பாஸ்போட் அடையாள அட்டை, என்லாஜ்மென்ட் படங்கள், விளம்பர போட், பிளக்சிக் போட் மற்றும் ஒவ வேலைகளுக்கு 24, யாழ் வீதி, (ரெட்னா வீதி ) யாழ்ப்பாணம். ( B/1915 )

### தவறிவிட்டது

க. சுகுமார். திருமதி சுகுமார் ஆகிய இருவருடைய அடையாள அட்டையும், ஊதா நிற கைப்பையும் யாழ் கச்சேரி தேசிய வீடமைப்புத் திட்ட காரியாலயத்திற்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் பத்திரிகைக் காரியாலயத்திலோ அல்லது இலங்கை வங்கி மாவட்ட காரியாலயத்திலோ ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (R/1088)

### வாய்சண்டை காதைப் பறித்தது

அயல்வீட்டுப் பெண்ணுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற சண்டையில் ஒரு பெண்மணியின் காது கிழிந்தது.

நாவற்குழி குடியேற்றத் திட்டத்தில் கடந்த சில நாட்களாக இருபெண்களுக்கிடையில் தகராறு இருந்து வந்தது. இத்தகராறு முற்றி கைச்சண்டையாக மாறியபோது இச்சம்பவத்தில் உடுமைய தாக்கப்பட்ட செ. செல்ல என்ற பெண்மணி காதிலிருந்து இரத்தம் ஒழுக போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் (லேசா)

### பிரியாவிடை விருந்து

(யாழ்ப்பாணம்)

இடமாற்றத் திட்டத்தின் கீழ் யாழ் இந்துக்கல்லூரியிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களான த. துரைராசா, க. குமாரசிங்கம், தி. ஸ்ரீனிவாசன், க. கதிர்காமத்தம்பி, நா. நல்லையா, கு. சண்முகலிங்கம், ம. பீற்றர்சிங்கம் ஆகியோருக்கு இன்று நண்பகல் பிரியாவிடை வைபவமும், விருந்துபசாரமும் நடைபெறும் சமகாலத்தில் மேற்படி ஆசிரியர்களுடன் கற்பித்த ஆசிரியர்களும் இவ்வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் அழைத்துள்ளது.

---

## கொக்குவில் இந்துக்கல்லூரி

**1991 ஆம் ஆண்டில் ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான**

## பிரவேசப் பரீட்சை

மேற்படி பரீட்சை 1991. 02 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

1991. 02 11 ஆம் திகதிக்கும் 1991 02. 14 ஆம் திகதிக்குமிடையில் பரீட்சார்த்திகளின் பெற்றோர் / பாதுகாவலர் கல்லூரி அலுவலகத்திற்கு நேரடியாக வந்து பரீட்சைப் பிரவேசப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆ. பஞ்சலிங்கம்
அதிபர்

1991.02 6 (B/1978,

---

## New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

★ தூய, பிரயோக கணிதம் ★
— திரு. இருஷ்ணா

### 92 A/L

PUREMATHS – மீதித்தேற்றம்
APPLIEDMATHS – சமாந்தர விசைகள், திருப்புதிறன்

ஆரம்பம்: 10-02-1991
Sunday – 12-00 மணி

### 91 A/L

PUREMATHS – பரமான வரைபு, தொகையீடு
APPLIEDMATHS – குற்றுப் பெருக்கம், காவிப்பெருக்கம்

ஆரம்பம்: 10 02-1991
Sunday – 8-00 மணி

(B/1983)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**G. A. Q.** பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான

**B. A.** வகுப்புகள் ஆரம்பம்; 09-02-1991

G A. Q. பரீட்சை முடிவுகள் கிடைக்காத மாணவர்கள் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(B. 1980)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம்.

**A/L 91** Day Classes ஆரம்பம: 06-02-1991 8-00 மணி

**O/L** சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பம
6-2-1991 3-00 மணி

(B/ 1979)

---

## போர்க்காலக் கருத்தரங்கு

கடந்த ஒருசில தினங்களில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சுமார் முப்பது போர்க்காலக் கருத்தரங்குகள் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட மேற்படி கருத்தரங்குகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பல மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர் (20)

---

## மரண அறிவித்தல்

### திரு. வைத்தியநாதர் தம்பையா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு: வைத்தியநாதர் தம்பையா அவர்கள் காலமானார். அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும் பராசக்தி, பூரணம் (கனடா), மணி (கனடா), தியாகராசா (திலகா ஸ்ரோர்ஸ், உரிமையாளர் வவுனியா), காலஞ்சென்ற மயில்வாகனம், வன்னியசிங்கம் (கனடா), மனோராணி (ஆசிரியை கொட்டகலை), தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், யோகராசா, குணம் (கனடா), சதானந்தம் (கனடா), கமலாதேவி, திருமதி வன்னியசிங்கம் (கனடா), வைகுந்தநாதன் (தபாலதிபர் கொட்டகலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7 - 2 - 91 இன்று காலை 10 மணியளவில் நடைபெற்று பெரியதம்பனை இந்து மயானத்தில் தகனம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

(R/ 1087)

---



## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 7

1986 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

தேவன் (சு. யோகராஜா - நல்லூர்)

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

சுசி (தானுதுவசிதரன் - திருநகர், கிளிநொச்சி)

இளங்கோ / அன்ரன் (பே. மோகன்ராஜ் - பெரிய பண்டிவிரிச்சான்)

நிமால் (இ. யோகநாதன் - யோகபுரம்)

ரவி (த. புவனேஸ்வரன் - உருத்திரபுரம்)

அன்சார் (க. கருணாகரன் - முரசுமோட்டை)

இதே ஆண்டு மன்னாரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

கப்டன் நோயல் (சூ ஞானதாஸ் - பரப்பாங்கண்டல்)

லெப். கரன்மாமா (மு. ஜெயசந்திரராசா - சுன்னாகம்)

ஜீவன்/குமார் (அ. பிரான்சிஸ் - அடம்பன்)

989 ஆம் ஆண்டு முட்டுச்சேனை என்ற இடத்தில் இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரமரணமடைந்த

லெப். லிங்கம் (கு. கோடீஸ்வரன் - திருமலை)

இதே ஆண்டு கிளிநொச்சி கோணாவிலில் இந்திய இராணுவம் பதுங்கியிருந்து தாக்கிய சமயம் காயமுற்று சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

லெப். விசுவாசம் (வி. புத்திரசீலன் - புதுக்குடியிருப்பு)

1990 இல் யாழ்ப்பாணத்தில் தற்செயலான விபத்தில் எமைப்பிரிந்த

2 ஆம்லெப். றேகன் (சி. சிவபாலன் - காரைநகர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-1977)

★ சிந்தனைக்கு ★

எதிரியின் பலத்தை எதிர்த்துப் போராடுவதைவிட, நம்முடைய பலவீனங்களை எதிர்த்துப் போராடுவது தான் எப்பொழுதும், அதிகக் கடினமானது.

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

81, ஸ்டேசன் வீதி, யாழ்ப்பாணம். 07-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2268
த.பெ.எண் 05

# 'பாலைவனப் புயலை'த் தாங்கி நிற்கும் ஈராக்

வளைகுடாவில் பத்தொன்பது நாட்கள் மட்டும் நிகழ்ந்த போரில் நூற்றுக்கணக்கில் அலை அலையாகச் சென்ற விமானங்கள் 41 000 தடவைகளுக்கு மேல் குண்டு வீச்சுத் தாக்குதலை நிகழ்த்தியுள்ளன. இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே நேரத்தில் பெருமளவினதான குண்டுகளையும் ஒரு குறிப்பிட்ட இலக்கில் பொழியக் கூடிய பி. 52 குண்டுவீச்சு விமானங்களும் பயன்படுத்தப் படுகின்றன. இக்குண்டுவீச்சின் போது ஒரு இலட்சம் தொன்னுக்கு மேற்பட்ட வெடிப்பொருட்கள் பயன் படுத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவைதவிர குறுந்தூர ஏவுகணைகளான குரூஸ் ஏவுகணைகளும் ஆயிரக்கணக்கில் ஈராக்கைத் தாக்கி உள்ளன. மேலும் நீண்ட தூரம் பாயக்கூடிய பீரங்கித் தாக்குதலும் ஈராக் மீது கடலில் இருந்தும், தரையில் இருந்தும் மேற்கொள்ளப்பட்டன.

இக்குண்டுவீச்சு ஏவுகணைத் தாக்குதலினால் ஈராக்கின் வெப்பநிலையே அதிகரித்து வருவதாக ஜேர்மன் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார். பஸ்ரா நகர் மீது நிகழ்ந்த குண்டு வீச்சால் சில தினங்கள் சூரியனே தெரியவில்லை எனவும் புகை மண்டலமும், தூசுகளும் வளிமண்டலத்தை நிரப்பி விட்டன என அங்கிருந்து வந்த இந்தியப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் விமானக் குண்டுவீச்சால் நீர் வழங்கல், மின்சாரம் என்பன முற்றாகப் பாதிக்கப்பட்டுவிட்டன. நாட்டில் உணவுப்பற்றாக்குறையும் ஓரளவு உள்ளது. அத்தோடு பிறக்கும் குழந்தைகளில் 90 சதவீதமானவை குறைப்பிரசவங்கள்.

ஆனால், இவ்வாறான நெருக்கடிகள் மத்தியிலும் ஈராக் மக்கள் மனம் தளரவில்லை இதை ஈராக் வானொலி தெரிவிக்கவில்லை. அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடம் பென்டகன் அறிவித்துள்ளது அமெரிக்க கேபிள் நியூஸ் நெற்வேக்கின் (சி. என். என்) பாக்தாத் செய்தியாளர் அறிவிக்கின்றார்.

இதனை வலியுறுத்துவது போல் அமெரிக்க கேபிள் நியூஸ் நெற்வேக் இரு படங்களையும் தொலைக்காட்சியில் காட்டியது. ஒரு படம் யுத்தம் ஆரம்பித்து மூன்றாம் நாள் ஈராக்கிய பெண்களும், குழந்தைகளும் குண்டு வீச்சிற்கு பதுங்கியுள்ள பதுங்கு குழியில் இருந்து ஈராக்கிய தேசிய கீதத்தை உணர்ச்சி பூர்வமாகப் பாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இரண்டாவது படம் பதினெட்டாம் நாள் போரின் பின் எடுக்கப்பட்ட பாக்தாத் நகர் பற்றிய படம் இதில் பாக்தாத் நகரம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. வாகனங்கள் நகரில் நெரிசலாகச் சென்று கொண்டிருந்தன. மக்கள் தங்கள் தேவைகளுக்காகவும் தொழில்களுக்காகவும் விரைவாக நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது மக்கள் தமது அன்றாட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதாவது போரின் பதற்றம் மக்களிடம் தெரிவதாக இல்லை உலக மகாயுத்தம் ஒன்றுக்கு அத்திவாரம் இடப்பட்டு விடுமோ என உலக மக்களால் அஞ்சப்படும் போரைக்கண்டு ஈராக் மக்கள் அஞ்சவில்லை இடிந்த வீடுகள், தொழிற்சாலைகளுக்கு முன்னால் நின்று ஈராக்கிய மக்கள் கண்ணீர் சிந்தவில்லை. அதற்கும் மேலாக ஈராக்கில் தங்கியிருந்த வெளிநாட்டவரை விட பெரியளவில் மக்கள் நாட்டை விட்டு வெளியேறவில்லை. (சிறியளவில் வெளியேறியுள்ளனர்) இந்த நிலையில் சதாம் ஹுசைன் ஈராக் மக்களை நம்பி அமெரிக்காவுடன் போரிட முனைந்ததையிட்டு ஆச்சரியமடையத் தேவை இல்லைத்தான்

ஆனால், இலங்கையின் வடக்கு கிழக்கில் நடைபெறும் போரைக் கண்டு தமிழ்மக்களில் பெரும்பாலானோர் நாட்டை விட்டு வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள் இலட்சக்கணக்கில் வெளியேறியும்விட்டார்கள் கடந்த மாதத்தில் மட்டும் வடபகுதியில் இருந்து 1 72 682 பேர் வெளியேறியுள்ளனர். இதில் 64 609 பேர் நிரந்தரமாக வெளியேறியுள்ளனர் இவ்வாறு வெளியேறியவர்களில் இலட்சக்கணக்கில் இந்தியாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அகதிகள் என்ற ரீதியில் குடியேறியும் வருகின்றார்கள் ஏனையவர்கள் கொழும்பிலும், வவுனியாவிலும் வெளியேறக் காத்துக் கிடக்கின்றார்கள்.

இத்தனைக்கும், ஈராக்கில் நடைபெறும் குண்டு வீச்சில் ஆயிரம் மடங்கில் ஒருமடங்குகூடனும் இங்கு நிகழவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அமெரிக்கக் கூட்டணியினர் ஒருநாள் பயன்படுத்தும் யுத்த செலவீடானது சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கிய ஒருவருட நிதி ஒதுக்கீட்டை விட இருமடங்கு அதிகமானது என்பதில் இருந்தே இது தெரியவரும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் நாட்டை விட்டு ஓடுதல் என்பது பிரச்சினைக்கு முகம் கொடுக்கவிருப்பமின்மையும். இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி சுயலாபம் தேடும் எண்ணமுமே தவிர வேறில்லை ஈராக்கியர்கள் ஆக்கிரமித்த மண்ணை பாதுகாக்க உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்றார்கள். இலங்கையிலோ தமது சொந்த மண்ணை விட்டே தமிழர்கள் தப்பி ஓடுகின்றார்கள்.

# "மருந்துகால் மதிமுக்கால்"

(நேற்றைய தொடர்ச்சி)

## 2. பிரச்சினையை அணுகுவதற்குச் சில ஆலோசனைகள்:

2.1. முடியுமான அளவிற்கு ஆரம்பத்தில் வரும் அடிப்படையில் சிகிச்சையைக் கையாள்வது சாலச் சிறந்ததாகும்.

(அ) சில நோய்கள் - பிரச்சினைகள், இயற்கையின் துணையுடனேயே நிவர்த்திக்க முடியும். உ-ம் மலச்சிக்கல் (வளர்ந்தோர் மத்தியில் ஓர் சாதாரணபிரச்சினை) இலை வகை, பழவகை, காய்கறி வகைகளைக் கூடுதலாக உணவில் சேர்த்தல். போதியளவு நீர் அருந்துவதன் மூலம் இப் பிரச்சினையை அணுகலாம்.

(ஆ) எளிமையானதும், இலகுவானதுமான சிகிச்சையை மேற்கொள்ளுதல், அத்துடன் கூடிய விரைவில் பொருத்தமான சிகிச்சை அளிப்பதன் மூலம் பிரச்சினையைச் சிக்கலாக்காமல் தவிர்த்தல். உ-ம் சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் 50% க்கு மேற்பட்ட வயிற்றோட்டத்திற்கு றோட்டா வைரஸ் (Rota Virus) கிருமியே காரணமாக அமைகின்றது. மருந்து கொடுக்காமலே நீராகாரம் கொடுப்பதன் மூலமும் வரட்சி ஏற்படாமல் பராமரிப்பதால், இயல்பாகவே இந்த நோய் குணமடைய முடியும். வைமயில், பக்ரிம், கயோபெக், இம்மோடியம் முதலாய மருந்து பாவிக்கப்படுவதனால் ஆபத்தே கூடுதலாக ஏற்பட முடியும்.

## 3. நோயாளர் சிகிச்சையில் வைத்தியர்கள் பங்கு

3.1 ஏற்பட்டிருக்கும்நோய் பற்றிய சில அடிப்படை உண்மைகள் நோயாளிக்கு விளங்கச் செய்வதற்கு ஆவன செய்தல் வேண்டும். நோயாளி தனக்கு ஏற்பட்டிருக்கும்நோய் பற்றி சரிவர அறிந்திருப்பாரேயாகில் அவரின் பூரண ஒத்துழைப்புக்கிட்டும் ஒத்துழைப்பில்லாமல் நோயைக் குணமாக்க முடியாது.

3.2. ஒரே நேரத்தில் பல வகை மருந்துகளைச் சிபாரிசு செய்வதை முடியுமான வரை தவிர்த்தல் நன்மை பயக்கும்.

3.3. நீண்ட காலத்திற்கு தேவையான மருந்துகள் சிகிச்சை நிலையங்களில் கொடுக்கும்போது, அம்மருந்துகள் சரிவரப் பாவிக்கப்பட்டமையை நிச்சயப் படுத்தல் வேண்டும்.

## 4. சிகிச்சையில் பங்குபற்றும் ஏனைய ஊழியர் பங்களிப்பு

4.1. மருந்து எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதைக் கட்டாயமாக விளங்க வைத்தல் வேண்டும். தொடர்ந்து சிகிச்சை பெறாவிடின் அதனால் ஏற்படும் சிக்கல்கள் பற்றி நோயாளர் அறிந்திருத்தல் அவசியம். உ-ம் அதி இரத்த அமுக்கம், சலரோகம் முதலியன. இவை போன்ற நோய்களுக்கு ஆளானோர் அந்நோயுடன் தமது வாழ்க்கை அமைய இருக்கிறது என்ற அடிப்படை உண்மையைச் சரிவர அறிந்திருக்க

கள் கட்டாயமாக உணவருந்திய பின்பே எடுத்தல் வேண்டும். அல்லாவிடின் குமட்டல் ஏற்பட முடியும்.

4.5 மருந்து சரிவர எடுப்பதனால் ஏற்படும் நன்மைகளை நோயாளர் நன்கு உணர்ந்துகொள்ளல் மிகவும் முக்கியம் எனவே இவ்வடிப்படை உண்மையைச் சரிவர சகல ஊழியர்களும் நன்கு உணர்ந்து ஆவன செய்தல் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது

4.6 மருந்து பூரணமாக எடுப்பதனால் மாத்திரம் நோயைக் கட்டுப்படுத்த முடியாது இந்த உண்மையைச் சகல ஊழியர்களும் நன்குணர்

வைத்திய கலாநிதி ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

ஆவன செய்தல் மிகவும் முக்கியமாகும். தொடர்ந்து வைத்திய கண்காணிப்பும் சிகிச்சையும் அவசியம் என்பதை அனேகமானோர் சிந்திக்கிறார்கள் இல்லை. இதனாலேதான் தொடர் சிகிச்சையை நிறுத்திக்கொள்கிறார்கள்.

4.2. கொடுக்கும் வில்லைகள் பூரணமாக எடுக்கா நிலையில் அந்நோய் தொடர்ந்து பலகாலம் நீடிப்பதைக் காண்கிறோம். உ-ம் மலேரியா சிகிச்சை 5 நாட்களுக்குத் தொடர்தல் வேண்டும். சில தினங்கள் வில்லைகள் பாவித்து, மிகுதி வில்லைகளை வைத்து இன்னொருவருக்குக் கொடுக்கும் போது, இருவருக்கும் பூரண சுகம் கிடைக்காமல் கஷ்டப்படுவதைக் காண்கிறோம்.

4.3. சில மருந்துகள் எடுக்கும்போது, அதனால் உடலில் ஏற்படும் சில மாற்றங்களை முன்கூட்டியே விளங்க வைப்பதன் மூலம் நோயாளர் அம்மருந்தைத் தொடர்ந்து எடுப்பதை நிச்சயிக்கலாம். உ-ம் வயிற்றோட்டத்தின் போது பியூறோசொலிடீன் (Furozolidine) பாவிக்கின் சலம் மஞ்சள் நிறமாகப் போகும் என்பதை முன்கூட்டியே சொல்லாவிடின், சில சமயங்களில் மருந்து பாவித்தல் இடைநிறுத்தமடைய முடியும்.

4.4. உணவின் பின் அல்லது உணவின் முன் மருந்து எடுப்பது போன்ற விபரங்கள் கொடுத்தல் மிக முக்கியம். உ-ம் மலேரியா நோய்க்குப் பாவிக்கப்படும் வில்லை

தல் வேண்டும். உ-ம் சலரோகம். நோயாளி தனது சலத்தைத் தானே சோதிக்கக் கூடியதாகவும், சல நிறமாற்றத்திற்கேற்ப தனது உணவை உட்கொள்வதனாலேதான் முற்றாக இந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் எனும் அடிப்படை உண்மையை நோயாளர் அனுபவரீதியில் பெற ஆவன செய்தல் வேண்டும்.

4.7. தொடர் சிகிச்சை பெறும் நோயாளர்கள் கவனத்திற்கு அவர்கள் எடுக்கும் மருந்துகளின் பெயர், எடுக்கும் அளவுகள் எடுக்காவிடின் அதனால் ஏற்படும் சிக்கல்கள் முதலியன விளங்கவைத்தல் மிகவும் அவசியம்.

## 5. பொதுமக்கள் கவனத்திற்கு.

5.1. நோய்வராமல் காக்கும் முயற்சிகளிலும், சுகாதார விருத்தி முயற்சிகளிலும் மக்கள் தமது கவனத்தைக் கூடுதலாகச் செலுத்துதல் வேண்டும்.

5.2. வைத்திய ஆலோசனையின்றி எம்மருந்தும் பாவிக்கக்கூடாது.

5.3. மருந்துகால் - மதிமுக்கால் - மேலே குறிப்பிட்ட உண்மைகளை மனதில் இருத்தி சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கையாள முன்வரல் வேண்டும்.

5.4. குறிப்பாக சாதகமான உணவுப் பழக்கவழக்கங்களைக் கையாள்வோமானால் எம்மத்தியில் ஏற்படும் கணிசமான நோய்களை முற்றாகத் தவிர்க்கலாம்.

# எண்பதுகளில் நாட்டுக்கூத்துக்கள் மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்றன

எண்பதுகளில் ஈழத்தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை வடிவமான நாட்டுக் கூத்துக்கள் புத்துயிர் பெற்றுள்ளன. இவை ஆய்வு நிலைக்கும், பேணல் நிலைக்கும் வளர்ந்திருப்பதுடன் அண்மைக்கால மோடி நாடகங்களின் வெற்றிக்கும் கைகொடுத்துள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும் விசேடமாக இன்றைய அரசியல் பிரசாரக் களத்துக்கும் ஏற்ற கலைவடிவமும் நாட்டுக்கூத்தே இதனால் ஈழத்துத் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் கிராமியக் கலை வடிவங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டியதுடன் இத்துறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட எண்பதுக்குப் பின் ஈழத்துத் தமிழ் நாடகங்கள் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கில் சன்மார்க்க சபைத் தலைவர் கனகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கை பழம்பெரும் நாடக நடிகர்கள் எஸ். ரீ. அரசு, எஸ். ஜோசநாதன், பிரான்சிஸ் ஜனம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இக் கருத்தரங்கில் உரையாற்றிய கலைப்பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை தனது உரையில் எழுபதெட்டளவில் நாடக அரங்கக் கல்லூரி மூலம் ஆரம்பிக்கப்பட்ட களப் பயிற்சியினால் தமிழ் நாடக அரங்கில் ஒரு புதுத் திருப்பம் உருவானது இதன் பலனாய் மேடையேற்றத்தின் முன் பயிற்சி, நீண்ட ஒத்திகை என்பன அவசியம் என உணரப்பட்டு பல தலைசிறந்த நாடகங்கள் எண்பதுகளில் தோற்றம்பெறலயின அத்துடன் இக் காலப்பகுதியில் இந்த அரங்க முயற்சிகள் மையப்படுத்தப்பட்டு வீதி நாடகங்களாகவும், தெருக்கூத்துக்களாகவும் விரிவடைந்துள்ளன என்றார்.

திரு. க. வை. தனேஸ்வரன், ம. சண்முகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர் சபை இணைச் செயலாளர் இ. கௌரிபாலன் வரவேற்புரை வழங்கினார்.

## திருட்டு முயற்சி

கன்னாதம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையில் இலை (இல 14) கடந்த 3ஆம் திகதி நள்ளிரவு திருடர் குழு ஒன்றினால் உடைக்கப்பட்டு திருடமுற்பட்டபோது அயலவர்கள் கூக்குரலிடவே அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பித்துக் கொண்டனர். இக் கிளையின் கதவுப் பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தன.

# ஆளுநருக்குத் தெரியாமலே தகவல் எனக்குக் கிடைத்தது

-சந்திரசேகர்

(டில்லி)

தமிழகம் தொடர்பான சில தகவல்கள் தமிழக ஆளுநருக்குக் கிடைக்காமல் தனக்குத் தெரிந்திருந்ததாலேயே தான் ஆளுநரின் அறிக்கையின்றி தமிழக அரசாங்கத்தைக் கலைத்ததாக இந்தியப் பிரதமர் எஸ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தமிழ ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா தாம் தமிழக அரசாங்கத்தைக் கலைக்கும்படி அறிக்கை எதுவும் தயாரிக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் வழக்கமாக மாநிலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை மற்றும் நிர்வாக விடயங்கள் ஆளுநர் மூலமாகவே மத்திய அரசாங்கம் இதுவரை செய்து வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்குப் பதிலளிக்குமுகமாகவே சந்திரசேகர் தமிழகத்தில் வெறும் சட்டம், ஒழுங்கு பிரச்சினை மட்டுமன்றி இ. ம. க அரசாங்கத்தின் விபரீதமான போக்கே தமிழக அரசாங்கத்தைக் கலைப்பதற்கு காரணம் எனக் குறிப்பிட்டார்.

இத்தகைய தகவல்கள் ஆளுநருக்குக் கிடைக்காதவை தமக்குக் கிடைத்ததால் ஆளுநரின் அறிக்கையின்றி தமிழக அரசாங்கத்தைக் கலைத்ததாக அவர் தெரிவித்தார்.

## பெருமளவு அமைதியுடன் தமிழகத்தில் நிகழ்ந்த பந்த்

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அனுஷ்டிக்கப்பட்ட பந்த் பொதுவாக அமைதியாகவே நடைபெற்றது. ஆங்காங்கு தீவைத்தல், கைகலப்பு, சாலை மறியல் போன்ற சிறு சம்பவங்களும் இடம்பெற்றன. ஆனால், குறிப்பிடப்படும் அளவுக்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இடம்பெறவில்லை என்று மாநில தலைமைச் செயலாளர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பந்தை ஒட்டி முன்னோடியாக 21,131 பேர் கைதுசெய்யப்பட்டனர் இவர்களில் 2836 பேர் குறிப்பிட்ட குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 4 பேர் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள். 2 பேர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். 30 பேர் சட்டசபை முன்னாள் உறுப்பினர்கள்

அதேவேளை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு கருணாநிதி, திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டமை தொடர்பான சகல விபரங்களையும் திரு சந்திரசேகர் வெளியிட வேண்டுமென்று நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள இடதுசாரி முன்னணியினரையும், மற்றும் தேமுமுக கழகத்தைச் சேர்ந்தவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் மு கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்

தேசிய முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் நேற்று டில்லியில் பிரதமர் சந்திரசேகர் இல்லத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்

சிறிலங்கா

அமைச்சர்களின் தேவைகள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளார் இந்த மதிப்பீட்டின் முடிவை யுடனே எதிர்பார்க்கப்படுகிறது நல்ல முகூர்த்தத்தில் புதிய அமைச்சரவைப் பெயர்கள் அடங்கிய பட்டியல் வெளிவரவுள்ளது

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை பத்மாவதி

வண்-வடமேற்கு, ராஜா ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்துரை பத்மாவதி 04-02-91 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு, நடேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானமணி (அதிபர், கார்த்திகேசு வித்திய சாலை, மண்டைதீவு), கனகசபை (சுங்கத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சிறீக்குமார் திருமலர், கஜந்திருஞானம் கதுளசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இல, 6 ராஜா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி திருநாவுக்கரசு (மகன்)

(B/1995)

### அருணாசலம் சின்னராசா

அருணாசலம் சின்னராசா அவர்கள் 06-02-91 அன்று காலமாகிவிட்டார். அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் திரிபுரவாணி, உருத்திரவாணி சிவசேந்தன், தற்பரவாணியின் அன்புத்தந்தையும், விஜயநந்தா, ஞானேஸ்வரன் (கண்ணா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜயவாணி, மணிகந். அரவிந், நர்மநந்தன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 58, வைரவர் கோயில் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிவசேந்தன் (மகன்)

(R/1091)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தட்டுக்கலில்

துடன் அதில் வந்த பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என விடுதலைப் புலிகள் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

நேற்றுக் காலை 8.00மணியளவில் ஆச்சவெளி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவ வாகனத்தை விடுதலைப்புலிகள் தட்டுக்கல் என்ற இடத்தில் கண்ணிவெடி வைத்து முற்றாகத் தகர்த்து அழித்தனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 26 பேர் படுகாயம் அடைந்ததாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

கண்ணிவெடியில

வர் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவத்தினரின் வாகன ஒன்று முற்றாகத் தகர்த்து அழிக்கப்பட்டது.

அதேவேளை இப்பகுதியில் விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருந்த பதினைந்து மிதிவெடிகளும் வெடித்து மேற்படி இராணுவத்தினருக்கு சேதங்களை விளைவித்தது.

அதேவேளை இந்தத் தாக்குதல் பற்றிக் குறிப்பிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் தெரிவித்தனர்.

தோப்பூர்

க்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. பல மணிநேரம் இடம்பெற்ற இந்த மோதலில் இராணுவத்தினருக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமினுள் புகுந்துகொண்டனர் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள்பற்றி சரியானதகவலைப் பெறமுடியவில்லை,

மனிதாபிமான

வித்த அமைச்சர் அயதங்களின்றி வரும் விமானங்களும் கப்பல்களும் மனிதாபிமான அடிப்படையில் இங்கு எண்ணெய் நிரப்பிச் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் கூட்டுப்படை நாடுகளின் வேண்டுகோளின் பேரில் இந்த அனுமதியை மறுக்கிறதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளுக்கு தளவசதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். ஐ. நா தீர்மானத்திற்கு அமையவும் சிறியநாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் ஹேரால்ட் ஹேரத் தெரிவித்தார்.

# 21 ஆம் நாள் வளைகுடாப் போர்

**பாக்தாத் உறவுகளை முறிந்தது**

★ அமெரிக்கா, பிரிட்டன், சவுதி அரேபியா, இத்தாலி, எகிப்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடனான அதன் ராஜதந்திர உறவுகளை ஈராக் நேற்று முறித்துக் கொண்டது. அரசாங்கத்தின் இந்த அறிவித்தல் உடனடியாகச் செயற்படும் என்று பாக்தாத் ரேடியோ அறிவித்தது.

**ஒரு வாரத்தினுள் தரைத் தாக்குதல்**

★ வளைகுடாவில் ஒரு வாரத்திற்குள் கூட்டுப் படைகளின் தரைப் படைத் தாக்குதல்கள் தொடங்கிவிடும் என அமெரிக்க ராணுவ தலைமை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்

★ 'ஈராக்கிய போர்த் திறனை பத்து ஆண்டுகாலம் முடமாக்கியதாக கூட்டுப்படை தாக்குதல்கள் ஆக்கிவிட்டபோதும் வான்தாக்குதலால் மட்டுமே போர் ஒன்றில் வெற்றி பெற முடியாது'' என்று அமெரிக்க ராணுவ தளபதிகளில் ஒருவரான லெப்டினன் ஜெனரல் ரொம் ஹெலி தெரிவித்தார்

★ வளைகுடாப் போர் குறித்த உண்மை நிலைவரங்களை அறிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பாதுகாப்புச் செயலாளர் டிக்செனியையும் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் பௌல்பாவெலையும் சவுதி அரேபியாவிற்கு அனுப்பியுள்ளார்

**வரலாறு காணாத தாக்குதல்**

★ வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத ஒருவகையில் ஈராக் மீதான கூட்டுப்படைகளின் விமானத் தாக்குதல்கள் இருக்கின்றன என ஈராக் அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் 391 முறை விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக வளைகுடாப் போர் ஆரம்பித்த பின்னர் இதுவே உக்கிரமான முறையில் இருந்ததாக பாக்தாத் வானொலி அறிவித்தது. பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் காயமுற்றுள்ளதாகவும், பல வீடுகள் நாசமாக்கப்பட்டதாகவும் இந்த வானொலி அறிவித்தது.

**9 விமானங்கள் சுடப்பட்டன**

★ கூட்டுப்படைகளின் ஒன்பது விமானங்கள் நேற்றுமுன்தினம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஈராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி அறிவித்தது.

★ அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகளுடன் சேர்ந்து சிரியாவின் ராணுவமும் ஈராக்குடன் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த சவுதி அரேபிய ராணுவ அதிகாரி '30 ஈராக்கிய ராணுவத்தினர் எல்லை கடந்து சவுதி அரேபியாவிற்குள் புகுந்த அவர்கள் சிரியவின் ராணுவத்தினருடன் துப்பாக்கிச் சண்டையில் இறங்கியதாக'' தெரிவித்தார்.

**டகரான் மீது ஸ்கட் தாக்குதல்**

★ சவுதி அரேபியாவின் துறைமுகங்களான டகரான்மீது நேற்று முன்தினமும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது

மயிருக்குப்

பின் சில தொழிற்பாடுகள் பறவைகளைப் போலும் காணப்படுகின்றதாம். இதனால் அவரை 'பேர்ட்பிரயின்'; எனவும் அழைக்கின்றனரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 3 வாரங்களாக ஒருவித திரவத்தை அருந்தி வந்துள்ளார் இதனால் பறப்பது போன்ற உணர்ச்சி தோன்றுவதாகவும் கூறுகின்றார்

டெரிக்கின் தலையில் கோத்திற்குப் பதிலாக இறக்கைகள் வளர்ந்ததை அடுத்து அந்த விஞ்ஞானஆய்வுகூடம் பூட்டப்பட்டது, அவர் வாங்கி பருகிய திரவமும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது

பாகிரியாரும்

பீ சிவநேசநாதனும் பாதிரியார்ஒருவருமே மேற்படி முகாமில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆகும். (தி)

விமானக் குண்டுவீச்சிற்கு

அனுசா (8 வயது), கணேஸ்வரன் (4 வயது), வைத்தீஸ்வரன் (42 வயது), பிரபாகரன் (35வயது). தேன்மொழி (6 வயது) ஆகியோர் காயமடைந்துள்ளனர். (லே)

பேராளிகளின்

நாளை மாலை 5.00 மணியளவில் அவ்வப்பகுதி மாவீரர் மயானத்தில் உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட உள்ளன.

அமெரிக்க

கூட்டுப் படைகளின் தளபதி நோர்மன் ஸ்வொர்ஸ்கொவ் தெரிவித்துள்ளார். ஜனவரி மாதம் 18 ஆம் திகதியன்று சவூதியின் தலைநகரான றியாட்டில் ஜெனரல் நோர்மன் ஸ்வொர்ஸ்கொவ் கருத்துத் தெரிவிக்கையில் ''ஈராக்கின் இராணுவப் படைக்கலப்பலம் பற்றிய புலனாய்வுத் துறையின் அறிக்கைகளில் மாறுபாடான தகவுகள் இருக்கின்றன'' என்று கூறியுள்ளார்.

போலியான ஏவுகணைத் தளங்கள், அரண்களை அமைத்து ஈராக் அமெரிக்க விமானங்களை ஏமாற்றியுள்ளதாக ஒரு இராணுவ அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் படைகளுக்கு எல்லாம் அச்சாணியான குடியரசுப் படைகள் மீது மேற்கொண்ட தாக்குதலின் விளைவுகளை மதிப்பீடு செய்வதில் பல தவறுகளை புலனாய்வுத்துறை விட்டுள்ளதாகவும் ஜெனரல் தோமஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஆரம்பித்து முதல் 15 நாட்களும் சவூதிக்கும், இஸ்ரேலுக்கும் எதிராக 54 ஸ்கட் ஏவுகணைகளை ஈராக் ஏவியது தொடர்பாகவும் புலனாய்வுத்துறை முன்கூட்டியே அறிந்துகொள்ளவில்லையாம்.

மொத்தத்தில் அமெரிக்க இராணுவத் துறையினர் ஏமாறப்பட்டுள்ளதாக 1982 1987 வரை தேசியபாதுகாப்புச்சபை உறுப்பினராக இருந்த ஹெவாட் ரெச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார். அமெரிக்கர் இராணுவ இரகசியங்களை ஒற்றர்கள் என்பதை முன்கூட்டிய நன்கறிந்த பாக்தாத். இராணுவச்செய்திகளை நிலத்துக்கடியிலுள்ள தொடர்புச் சாதனம் மூலம் அனுப்பி இருக்கலாம் என்று ஹெவாட் மேலும் தெரிவித்தார்.

செய்மதிகள் உட்படப் பல நவீன துப்புத்துலக்கும் கருவிகளைப் பாவித்தும் ஈராக்கின் படைக்கல இரகசியங்களை முற்றாக அறிய முடியவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எங்களுக்குப் பல விடயங்கள் தெரியாது என்று அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களப் பேச்சாளரான பற்வில்லியம்ஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.